நோயாளி தகவல் கையேடு

# சால்புடமால்

## (SALBUTAMOL)





MINISTRY OF HEALTH
SINGAPORE

National Healthcare Group — Adding years of healthy life
NUH — National University Hospital — A member of the NUHS
Alexandra Health
EASTERN HEALTH ALLIANCE
JurongHealth
SingHealth

SINGHEALTH / PIL / T124R0

## உங்கள் மருந்து **பற்றிய** தகவல்

**மருத்துவர் உங்களுக்கு சால்புடமால் (salbutamol) கொடுத்திருக்கிறார். இந்த மருந்து நான்கு வடிவங்களில் வருகிறது – மாத்திரைகள், சிரப், இன்ஹேலர்கள் மற்றும் மருந்துக் கரைசல்.**

**சால்புடமால் மூச்சுக் குழாய்களை விரைவாகத் திறந்துவிடக்கூடிய ஒரு மருந்தாகும் (மூச்சுக்குழாய் விரிப்பி). இதன் காரணமாக நுரையீரல்களுக்கு உள்ளேயும் வெளியேயும் காற்றோட்டம் மேம்படும். ஆஸ்துமாவின் பாதிப்புகளுக்கு (எ.கா. மூச்சிழுப்பு, நெஞ்சு இறுக்கம், இருமல், மூச்சுத் திணறல்), இதை மாத்திரைகளாக எடுத்துக் கொள்ளலாம் அல்லது நேரடியாக நுரையீல்களுக்குள் மூச்சுக் காற்றோடு உள்ளிழுக்கலாம். மூச்சுக்குழாய் அழற்சி (bronchitis) அல்லது சுவாசப் பிரச்சினைகள் உள்ள நோயாளிகளுக்கும் சால்புடமால் பயன்படுத்தப்படுகிறது. மேலும், உடற்பயிற்சி போன்ற தீவிர நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உங்களுக்கு மூச்சிழைப்பு அல்லது சுவாசிப்பதில் சிரமங்கள் ஏற்படும் என்றால், உங்களின் மூச்சுக் குழாய்களைத் திறந்து வைத்திருக்க இந்த மருந்து அவற்றைச் செய்வதற்கு முன்பாகப் பயன்படுத்தப்படுகிறது.**

## மருந்தை நான் **எப்படி** உட்கொள்ள வேண்டும்?

பிரச்சினையின் கடுமைக்கேற்ப, நீங்கள் பயன்படுத்த வேண்டிய மருந்தின் அளவை மருத்துவர் தீர்மானிப்பார். இந்த மருந்தை மருத்துவர் கூறும் அளவில் பயன்படுத்துங்கள்.

மருந்தைச் சரியான முறையில் எடுக்கத் தெரியவில்லை என்றால், மருந்தாளரிடம் கேளுங்கள்.

**மாத்திரைகள் / சிரப்**

இவற்றை மருத்துவர் கூறிய அளவுக்கு மேல் உட்கொள்ளாதீர்கள். மருந்தை உணவுக்கு முன்போ அல்லது பிறகோ எடுக்கலாம். மருந்தை மெதுவாக வெளிவிடும் மாத்திரைகள் என்றால், அவற்றை அப்படியே முழுதாக விழுங்க வேண்டும். அவற்றைத் துளாக்கியோ அல்லது மென்றோ விழுங்கக் கூடாது.

மருந்துகளை எப்போதும் பிள்ளைகளின் கைகளுக்கு எட்டாத இடத்தில் வைத்திருங்கள்
காலாவதியான அல்லது இனிமேல் தேவைப்படாத மருந்துகளை வீசிவிடுங்கள்

**இன்ஹேலர்**

இன்ஹேலரை தினமும் பயன்படுத்தலாம், அல்லது மூச்சுத் திணறல், இருமல், மூச்சிழுப்பு (wheezing) போன்ற அறிகுறிகள் இருக்கும்போது மட்டும் பயன்படுத்தலாம்.

மருந்தினால் வயிறு பாதிக்காமலிருக்க, மருந்தை உணவு, பால் அல்லது அமில எதிர்ப்பிகளோடு (antacids) உட்கொள்ளுங்கள்.

இன்ஹேலரை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று மருத்துவர் கூறியதை அப்படியே பின்பற்றுங்கள். ஒரு செலுத்தலுக்கும் (puff) மேலாகப் பயன்படுத்தினால், இரண்டாவது செலுத்தலை, முதல் செலுத்தலுக்குப் பிறகு 1 நிமிடம் கழித்து இழுங்கள். புது இன்ஹேலர் பயன்படுத்தும்போது அதில் மருந்து நிரப்ப மறக்காதீர்கள். இன்ஹேலரின் கடைசி சில ஸ்பிரேக்களில் (sprays) மருந்து இருக்காது என்பதையும் நினைவில் கொள்ளுங்கள்.

ஆஸ்துமா சிகிச்சையில், இந்த மருந்து வழக்கமாக ஒரு வேளைக்கு ஒன்று அல்லது இரண்டு செலுத்தல்கள் என, ஒரு நாளைக்கு மூன்று அல்லது நான்கு முறை மூச்சினுள் உறிஞ்சப்படுகிறது. அடுத்தடுத்த மருந்து வேளைகளுக்கிடையில் குறைந்தது நான்கு மணி நேர இடைவெளி இருக்க வேண்டும். ஒரு நாளைக்கு எட்டு செலுத்தல்களுக்கு மேல் எடுக்காதீர்கள். இன்ஹேலரை முன்பைவிட இப்போது அடிக்கடிப் பயன்படுத்தினால், மருத்துவரிடம் தெரிவியுங்கள். உங்களின் ஆஸ்துமா மீண்டும் சோதிக்கப்படத் தேவை இருக்கலாம்.

**மருந்துக் கரைசல்**

சால்புடமால் கரைசல், நெபுலைசர் (nebuliser) என்னும் சாதனத்தின் வழியாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. இச்சாதனம் கரைசலை மிகச் சிறிய துளிகளாக மாற்றுவதால், அத்துளிகளை ஒரு சுவாச முகமூடி வழியாக நுரையீரலுக்குள் இழுக்க முடிகிறது. சால்புடமால் கரைசல் தனியாகத் தரப்படலாம் அல்லது இப்ராட்ரோபியம் கரைசலோடு சேர்த்துத் தரப்படலாம். பிரச்சினையின் கடுமையைப் பொறுத்து, ஒவ்வொரு 4-6 மணி நேரத்திற்கு ஒரு முறையோ அல்லது தொடர்ச்சியாகவோ இதை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கலாம்.

## மருந்து பயன்படுத்த **மறந்துவிட்டால்** என்ன செய்வது ?

ஒரு வேளைக்குரிய மருந்தை பயன்படுத்தத் தவறிவிட்டால் அல்லது மறந்துவிட்டால், ஞாபகம் வந்த உடனேயே எடுங்கள். எனினும், அப்போது அடுத்த வேளைக்கான நேரம் நெருங்கிவிட்டால், முதலில் எடுக்கத் தவறிய மருந்தை எடுக்காமல் விட்டுவிட்டு, அடுத்த வேளை வரை காத்திருந்து எடுங்கள். முதலில் எடுக்கத் தவறிவிட்டோமே என்று அடுத்த வேளையில் இரண்டு மடங்கு மருந்தோ அல்லது கூடுதல் மருந்தோ பயன்படுத்தாதீர்கள். மருந்தைப் பலமுறை எடுக்கத் தவறியிருந்தால், என்ன செய்ய வேண்டும் என்பதை மருத்துவரிடம் கேளுங்கள்.

## இந்த மருந்து ஏற்படுத்தக்கூடிய **பக்க-விளைவுகள்** யாவை ?

மற்ற மருந்துகளைப் போலவே, இந்த மருந்திலும் சில பக்க-விளைவுகள் இருக்கின்றன. அவற்றில் பின்வருபவை அடங்கும் :

- இருதயஇரத்தக்குழாய்
- நடுக்கம், குறிப்பாக கைகளில்
- வழக்கத்தைவிட வேகமாக அல்லது ஒழுங்கில்லாமல் இருதயம் துடித்தல்
- முகம் மற்றும் கழுத்து திடீரென்று சிவத்தல் மற்றும் வெப்பமாக உணர்தல்

நரம்பு மண்டலம்

- தவிப்பு உணர்வு, அல்லது தூங்குவதற்குச் சிரமப்படுதல்

குறிப்பு: மருந்தைத் தெரியாமல் அளவுக்கு அதிமாக எடுத்துவிடும்போது மேற்கூறிய பக்க-விளைவுகள் ஏற்படுவதை நீங்கள் கவனிக்கலாம். இவை பொதுவாக சில மணி நேரத்தில் நீங்கிவிடும் என்றாலும், இவை ஏற்பட்டிருந்தால் மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

தசை, எலும்பு

- தசைகள் இறுகுதல் மற்றும் தசைப் பிடிப்புகள்

மருந்து பயன்படுத்தும் இடத்தில் ஏற்படும் பாதிப்புகள்

- வாய் உலர்தல் அல்லது வாய் மற்றும் தொண்டை எரிதல் (குறிப்பாக, இன்ஹேலர் பயன்படுத்தும்போது. இப்பிரச்சினையைப் போக்க, மருந்து பயன்படுத்திய பிறகு வாயைக் கொப்பளிக்கலாம்).

இந்த பக்க-விளைவுகள் பெரும்பாலும் குறுகிய காலத்திற்கே பாதிக்கும், மற்றும் நாளடைவில் பொதுவாக நீங்கிவிடும். எனினும், இவற்றில் ஏதாவது சில காலத்திற்குப் பிறகும் தொடர்ந்து தொல்லை கொடுத்தால், மருத்துவரிடம் தெரிவிக்க வேண்டும்.

## நான் எடுக்க வேண்டிய **முன்னெச்சரிக்கைகள்** யாவை ?

பின்வருபவை இருந்தால், மருத்துவர் மற்றும் மருந்தாளரிடம் தெரிவியுங்கள்

- மற்ற மருத்துவப் பிரச்சினைகள் இருத்தல், குறிப்பாக தைராய்டு பிரச்சினைகள், இருதயப் பிரச்சினைகள், உயர் இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் அல்லது கிளகோமா.
- வேறு மருந்துகள், மூலிகைகள், ஊட்டச்சத்து உணவுகள் அல்லது வைட்டமின்களை நீங்கள் உட்கொண்டு வருதல்.
- வேறு மருந்துகளுக்கு ஒவ்வாமை இருத்தல், அல்லது இந்த மருந்துக்கு ஒவ்வாமை ஏற்படுதல். ஒவ்வாமையின்போது பின்வரும் அறிகுறிகளில் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டது பாதிக்கும்: முகம்/கண்கள்/உதடுகள் வீங்கும், மூச்சு விடச் சிரமமாக இருக்கும், அல்லது உடல் முழுவதும் அரிப்புடன் கூடிய தோல் தடிப்புகள் தோன்றும்.

நீங்கள் தாய்ப்பால் கொடுத்து வருதல், கர்ப்பமாக இருத்தல், அல்லது சிகிச்சைக் காலத்தில் கர்ப்பமடைவதற்கு வாய்ப்பு இருத்தல்..

## மருந்தை நான் எப்படிப் **பாதுகாக்க** வேண்டும்?

மருந்தின்மீது வெப்பமோ நேரடி வெளிச்சமோ படாதவாறு, அறை வெப்பநிலையில், ஓர் உலர்ந்த இடத்தில் வைத்திருங்கள். உங்களிடம் கூறப்பட்டாலன்றி, மருந்துகளை குளிர்ப் பதனப் பெட்டியில் வைக்காதீர்கள்.